


'மியாட்' மருத்துவமனையில், மூட்டு சீரமைப்பு அருங்காட்சியகத்தை, மருத்துவமனையின் நிறுவனர் டாக்டர் பி.வி.ஏ.மோகன்தாஸ், தலைவர் மல்லிகா மோகன்தாஸ், இணை நிர்வாக இயக்குனர் டாக்டர் பிருத்வி மோகன்தாஸ் ஆகியோர் தொடங்கி வைத்த போது எடுத்த படம். அருகில் முடநீக்கியல் துறை தலைவர் டாக்டர் பேரி டிசாரியோ உடன் இருக்கிறார்.

# ஆசியாவில் முதல் முறையாக மூட்டு சீரமைப்பு அருங்காட்சியகம்

## 'மியாட்' மருத்துவமனையில் தொடங்கப்பட்டது

சென்னை, ஏப்.19-

ஆசியாவிலேயே முதல் முறையாக, மூட்டு சீரமைப்பு அருங்காட்சியகம் சென்னை மணப்பாக்கத்தில் உள்ள 'மியாட்' மருத்துவமனையில் தொடங்கப்பட்டுள்ளது.

### அருங்காட்சியகம் திறப்பு

வாழ்நாளில் அதிக காலம் நீடிக்கும் செயற்கை மூட்டினை தேர்வு செய்யும் வாய்ப்பை நோயாளிக்கு அளிக்கவும், மக்களுக்கு மூட்டு மாற்று சிகிச்சை பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தவும், மூட்டு மாற்றி சிகிச்சை குறித்த தவறான கட்டுக்கதைகளை அகற்றவும் சென்னை மணப்பாக்கத்தில் உள்ள 'மியாட்' மருத்துவமனையில், 'மூட்டு சீரமைப்பு அருங்காட்சியகம்' திறக்கப்பட்டது. இது ஆசியாவிலேயே முதல் முறையாக திறக்கப்பட்டுள்ளது.

இந்த அருங்காட்சியகத்தை, 'மியாட்' மருத்துவமனையின் நிறுவனர் டாக்டர் பி.வி.ஏ.மோகன்தாஸ், தலைவர் மல்லிகா மோகன்தாஸ், இணை நிர்வாக இயக்குனர் டாக்டர் பிருத்வி மோகன்தாஸ் ஆகியோர் தொடங்கி வைத்தனர். 'மியாட்' மருத்துவமனை தற்போது அனைத்து வசதிகளுடன் 43 துறைகளுடன் ஆயிரம் படுக்கை வசதியுடன் கூடிய மருத்துவமனையாக உயர்ந்துள்ளது.

### உலகிலேயே ஒப்பற்ற இடம்

'மியாட்' மருத்துவமனை இதுவரை 20 ஆயிரம் இடுப்பு மூட்டு மாற்று அறுவை சிகிச்சையையும், 10 ஆயிரம் முழங்கால் மூட்டு மாற்று அறுவை சிகிச்சைகளையும் செய்துள்ளது. இது உலகிலேயே அதிக எண்ணிக்கை கொண்ட ஒரு சாதனையாகும். மருத்துவமனையின் நிறுவனர் டாக்டர் பி.வி.ஏ.மோகன்தாஸ் 1975-ம் ஆண்டிலேயே முதல் மொத்த இடுப்பு மாற்று அறுவை சிகிச்சையை மேற்கொண்டு உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த தனித்துவம் வாய்ந்த சிறப்புகளினால், இனி வரும் காலங்களில் 'மியாட்' மருத்துவமனை உலகிலேயே மூட்டு மாற்று அறுவை சிகிச்சைகளில் ஒப்பற்ற இடத்தை பெற்றுள்ளது. மூட்டு மாற்று அறுவை சிகிச்சைக்காக உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் நோயாளிகள் 'மியாட்' மருத்துவமனைக்கு வந்து சிகிச்சை பெற்று பயன் அடைகின்றனர். 'டெப்பூ-ஜான்சன் அன்ட் ஜான்சன்' நிறுவனத்தின் உதவியுடன் அதிக அளவிலான செயற்கை மூட்டுகள் பொருத்தப்பட்டுள்ளன.

### முற்றிலும் குணப்படுத்துதல்

தற்போது, செயற்கை மூட்டுகளை தயாரிக்க பயன்படும் மூலப்பொருள்கள் மாறிவிட்ட சூழ்நிலையில், அதன் வடிவமைப்புகளும் மாறி விட்டன. இதனால் சரியான மற்றும் தேவையான அளவில், பொருத்தக்கூடிய கருவிகளும், உதிரி பாகங்களும், துணை சாதனங்களும் மாற்றம் அடைந்துள்ளன. மேற்கூறிய காரணங்களால் செயற்கை மூட்டின் ஆயுட்காலம் அதிகரித்துள்ளது.

இதுபோன்ற காரணங்களால், 'மியாட்' மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளை முற்றிலும் குணப்படுத்தி, தங்களின் வேலைகளை தடையில்லாமல் செய்யும் அளவுக்கு தயார் செய்து அனுப்புகிறோம். மேலும் நோயாளிகளின் உடல் நிலைக்கு ஏற்ப வாழ்நாள் முழுவதும் பொருந்தக்கூடிய செயற்கை மூட்டுகளையும் 'மியாட்' மருத்துவமனையினால் வழங்க முடிகிறது.

மேற்கண்ட தகவல்கள் அனைத்தும் 'மியாட்' மருத்துவமனை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.